**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப் பிரிவு),ஆணையரகம்,**
**கிண்டி, சென்னை – 32.**

## காலிப்பணியிடங்கள் நிரப்புதல் குறித்த அறிவிப்பு

<u>அறிக்கை எண்.815/பஅ 4/2016,</u> <u>நாள். 30.01.2019</u>

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப் பிரிவு) சென்னை ஆணையரகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பத்தினை (கடவு சீட்டு அளவில் புகைப்படம் ஒட்டி) பூர்த்தி செய்து குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் நகல்களை தன்கையொப்பமிட்டு ( Self attested ) இணைத்து நிர்வாக அலுவலர் (பணியமைப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, (பயிற்சிப்பிரிவு) கிண்டி , சென்னை –32 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**<u>காலிப் பணியிடங்களின் விவரங்கள் :</u>**

| வ.எண். | பதவியின் பெயர் | சம்பள விவரம் | வயது | | கல்வித்தகுதி | இட ஒதுக்கீடு மற்றும் காலி பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | Level 1<br>Rs.15700- 50000 | 18 வயது நிறைவு பெற்றிருக்கவேண்டும் (01.01.2019 அன்றைய நிலவரப்படி)<br>அ) GT – 30 வயது<br>ஆ) BC & MBC/DNC – 32 வயது<br>இ) SC, SC (A) & ST – 35 வயது | | 8 – ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | இனம் | முன்னுரிமை | முன்னுரிமை அற்றவர் |
| | | | SSLC-க்கு மேல் கல்வித் தகுதியுடைய BC / MBC / SC / SC(A) / ST வகுப்பினருக்கு | உச்ச வயது வரம்பு இல்லை | | அ) BC (Other than Backward class Muslim) | 1 | – |
| | | | முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (SC / ST) | 53 வயதுக்குள் | | ஆ) GT (W)(DW) | – | 1 |
| | | | | | | இ) MBC / DNC (W)(DW) | – | 1 |
| | | | | | | ஈ) ) BC (W)(DW) (Other than Backward class Muslim) | – | 1 |
| | | | | | | உ) MBC / DNC | – | 1 |
| | | | | | மொத்தம் | ஊ) BC (Other than Backward class Muslim) | – | 1 |
| | | | | | | 6 | 1 | 5 |
| | | | முன்னாள் இராணுவத்தினர் – பிற வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OC / BC / MBC ) | 48 வயதுக்குள் | | | | |
| | | | மாற்றுத்திறனாளிகள் | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் | | | | |

விண்ணப்பபடிவம் மற்றும் விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "நிர்வாக அலுவலர் (பணியமைப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,(பயிற்சிப் பிரிவு) கிண்டி, சென்னை –32 " என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய **<u>கடைசி நாள்.15.02.2019</u>** (மாலை 5.45) குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்திவைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யவோ "நிர்வாக அலுவலர் (பணியமைப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,(பயிற்சிப் பிரிவு) கிண்டி , சென்னை –32 " அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**நிர்வாக அலுவலர் (பணியமைப்பு),**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப் பிரிவு)**
**கிண்டி , சென்னை –32**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப் பிரிவு),ஆணையரகம்,**
**கிண்டி, சென்னை – 32.**

**<u>விண்ணப்ப படிவம்</u>**

| |
|---|
| கடவுச் சீட்டு<br>அளவில்<br>புகைப்படம் |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | : |
| விண்ணப்பதாரரின் பெயர் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : |
| பிறந்த தேதி மற்றும் வயது | : |
| கல்வித்தகுதி | : |
| பாலினம் | : |
| விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | : |
| விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் இன இட ஒதுக்கீடு | : |
| நிரந்தர முகவரி | : |
| தகவல் அனுப்பப்பட வேண்டிய முகவரி | : |
| வேலைவாய்ப்பு பதிவு எண் இருப்பின் அதன் விவரம் | |
| காவல் துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தால் அதன் விவரம். | : |
| இணைத்து அனுப்பப்படுகின்ற சான்றிதழ்களின் விவரம் | : |

**<u>உறுதிமொழி:</u>**

மேற்காணும் விவரங்கள் யாவும் உண்மையென உறுதியளிக்கிறேன். பின் நேர்வில் மேற்கூறிய விவரங்கள் தவறு என கண்டறியப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்புகளையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் நாள்

| |
|---|
| **<u>தேர்வுக்கான தகுதி விவரம் :</u>** |
| **<u>கல்வித்தகுதி :</u>** தனியர் எட்டாம் வகுப்பு தகுதியுடன் மட்டும் விண்ணப்பித்தால், மதிப்பெண் சான்றிதழில் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியரிடம் கையொப்பம் பெற்று அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (Gazetted Officer) சான்றொப்பம் (attested) பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. |
| **<u>வயது :</u>** வயது குறிப்பிடப்பட்ட அரசு சார்ந்த அமைப்பு வழங்கிய அடையாளச் சான்று / சான்றிதழ். |
| சாதிச்சான்றிதழ் (வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்ட சான்றிதழ்). |
| முன்னுரிமை கோரும் மாற்றுத்திறனாளி (PH), ஆதரவற்ற விதவை (DW), முன்னாள் இராணுவத்தினர் (Ex–Servicemen), முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் (Ex–Servicemen Wards), கலப்பு திருமணம் புரிந்தவர், நில நன்கொடையாளர் ஆகியோர் கீழ்காணும் அரசுத் துறையினரால் வழங்கப்பட்ட உரிய சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| அ) | மாற்றுத்திறனாளி (PH) | – | மாவட்ட தலைமை மருத்துவமனை குழுவினரால் வழங்கப்பட்ட சான்று. |
| ஆ) | ஆதரவற்ற விதவை (DW) | – | வருவாய் பிரிவு அலுவலர் / மாவட்ட உதவி ஆட்சியர் / மாவட்ட துணை ஆட்சியர். |
| இ) | முன்னாள் இராணுவத்தினர் (EX) | – | இராணுவ பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்று (Army / Navy / Air–Force) |
| ஈ) | முன்னாள் இராணுவத்தினர் (Wards) | _ | மாவட்ட முன்னாள் இராணுவ நலத்துறை அலுவலரால் வழங்கப்பட்ட இராணுவ வீரரின் வாரிசுக்கான சான்று. |
| உ) | கலப்பு திருமணம் புரிந்தவர் | – | சம்மந்தப்பட்ட வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்று. |
| ஊ) | நில நன்கொடையாளர்கள் | – | சம்மந்தப்பட் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட சான்று. |